Verified RealEstate™

RE REGULATORY RECORD

RERA Document

The document as the regulator published it, reproduced in full behind this page.

Published for reference. The authority's own register is the operative record.

Verified RealEstate™
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India

hello@verified.realestate
+91 9996 12 9996
verified.realestate

DIGITALLY VERIFIED RECORD

"நீரின்றி அமையாது உலகு"

நீர்வளத்துறை

TNWRD

அனுப்புநர்	பெறுநர்;
பொறி.இரா.அருண்மொழி, பி.டெக்., செயற்பொறியாளர், நீ.வ.து., கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம்.	M/s. Happy Home, Arihant Plaza, 1st Floor, No.84/85, Wall Tax Road, Park Town, Chennai – 600 003.

கடித எண்: இவஅ 1 / கோ.28 (சிறுபாலம் – செரப்பணஞ்சேரி) / 2026 / நாள்: 12.06.2026.

அய்யா

பொருள் : சிறுபாலம் – காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர் வட்டம் – செரப்பணஞ்சேரி கிராமத்தில் புல எண்கள். 201/1B & 202/5A–ல் செல்லும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள செரப்பணஞ்சேரி – மோச்சேரி கிராம தார் சாலையிலிருந்து தங்களுக்கு சொந்தமான புல எண்கள். 201/2 & 202/6–ல் செல்லும் வாய்க்காலின் குறுக்கே சிறுபாலம் தனது சொந்த செலவில் அமைத்து பட்டா கால்வாயினை மாற்றம் செய்து கொள்ள அனுமதி கோரியது – தற்காலிக தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. தங்களின் விண்ணப்ப நாள்.13.02.2026

2.உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு அவர்களின் கடித எண். கோ.99 / 395 – செரப்பணஞ்சேரி / 2025 / நாள். 29 .04.2026.

****

பார்வை எண்.1–ல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், செரப்பணஞ்சேரி கிராமத்தில் புல எண்கள். 201/1B & 202/5A–ல் செல்லும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள செரப்பணஞ்சேரி – மோச்சேரி கிராம தார் சாலையிலிருந்து தங்களுக்கு சொந்தமான புல எண்கள். 201/2 & 202/6–ல் செல்லும் வாய்க்காலின் குறுக்கே சிறுபாலம் தனது சொந்த செலவில் அமைத்து பட்டா கால்வாயினை மாற்றம் செய்து கொள்ள நீர்வளத்துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

தங்களால் அரசாணை எண்.101 / நீர்வள (ஆர்.2) துறை / நாள்.30.09.2024-ன்படி அரசு நிலத்தில் சிறுபாலம் அமைக்க வேண்டி உரிய விண்ணப்பத்துடன் விண்ணப்ப கட்டணம் ரூ.5000/- (Demand Draft No. 010252, Dated.05.05.2026 vide Axis Bank, Sterling Road, Chennai Branch) மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டு கட்டணம் ரூ. ரூ.25000/- (Demand Draft No. 010253, Dated.05.05.2026 vide Axis Bank, Sterling Road, Chennai Branch) செலுத்தியுள்ளீர். மேலும், ரூ.100/- மதிப்புள்ள பத்திர தாளின் வாயிலாக இழப்பீட்டு பத்திரம் (Indemnity Bond) அளித்துள்ளீர்) மேலும், இந்த வங்கி வரைவோலைகள் கோட்ட கண்காணிப்பாளர் மூலமாக அரசு கணக்கில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, மேற்கண்ட தளத்தினை தள அலுவலரால் ஆய்வு செய்து நீர்வளத்துறையின் தற்காலிக தொழில்நுட்ப அனுமதி கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

குன்றத்தூர் வட்டம், செரப்பணஞ்சேரி கிராமத்தில் தாங்கள் சிறுபாலங்கள் அமைத்துக் கொள்ள அனுமதி கோரியுள்ள நில பகுதிகளின் நில மட்ட அளவுகள் இத்துறையின் உதவி பொறியாளர், நீ.வ.து., பாசனப்பிரிவு, படப்பை மற்றும் உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு அவர்களால் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பதியப்பட்டுள்ளது. தாங்கள் சிறுபாலங்கள் அமைத்துக் கொள்ள அனுமதி கோரியுள்ள பகுதிக்கு அருகில் அதன் மேற்புறத்தில் அமைந்துள்ள செரப்பணஞ்சேரி ஏரியின் முதல் மதகின் கீழ்மட்ட (+) 11.320 மீ-ஐ (Sill level of Sluice No.1) அடிப்படையாக கொண்டு தள அலுவலர்களால் நிலமட்ட அளவுகள் எடுக்கப்பட்டு, பார்வை எண்.2-ல் காணும் உதவி செயற்பொறியாளர், நீவது., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு அவர்கள் கடிதத்தின் வாயிலாக விரிவான தொழில்நுட்ப அறிக்கை பரிந்துரை செய்து அறிக்கை பெறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், செரப்பணஞ்சேரி கிராமம், தங்களின் புல எண் நிலங்களுக்கு கிழக்கு திசையில் செரப்பணஞ்சேரி – மோச்சேரி தார் சாலை அமைந்துள்ளது. தங்களின் புல எண் நிலங்களுக்கு வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு திசையில் காலி நிலங்களும் அமைந்துள்ளன. தங்களின் நிலங்களிலிருந்து சுமார் 400 மீ தொலைவில் மேற்கு திசையில் செரப்பணஞ்சேரி ஏரி அமைந்துள்ளது. மேலும், தங்களின் புல எண் நிலங்கள் ஆனது செரப்பணஞ்சேரி ஏரியின் கீழ் பாசனம் பெறும் நன்செய் நிலங்கள் ஆகும்.

வருவாய்துறையின் பதிவேட்டின்படி செரப்பணஞ்சேரி கிராமம், புல எண்கள். 201/2 & 202/6-ஆனது "அரசு புறம்போக்கு வாய்க்கால்" என உள்ளது. ஆனால், இந்த வாய்க்கால் நிலத்தில் குன்றத்தூர் வட்டார வளர்ச்சி ஒன்றியத்தின் மூலம் பல ஆண்டுகளுக்கு முன்னரே தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, தற்பொழுது இந்த வாய்க்காலானது புழக்கத்தில் இல்லை என தள ஆய்வில் தெரியவருகிறது.

தற்பொழுது, தங்களின் நிறுவனம் சிறுபாலங்கள் அமைத்துக்கொள்ள அனுமதி கோரும் நிலங்கள் அடங்கிய சுற்றுப்புற நிலங்களுக்கு ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அவர்களால் பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தடையின்மை சான்று வழங்கிட கோரப்பட்டு, அந்நிலங்களுக்கு கடந்த 08.04.2025 அன்று நீர்வளத்துறையின் மூலம் தொழில்நுட்ப அறிக்கை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் நிபந்தனை வரிசை எண்.5 & 7-ல் புல எண். 201/2 & 202/6-ல் செல்லும் அரசு புறம்போக்கு வாய்க்கால் நிலத்தில் குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக ஊரக வளர்ச்சி துறையின் மூலம் செரப்பணஞ்சேரி (நாவலூர்) - மோச்சேரி தார் சாலை அமைக்கபட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளதால் பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பொழுது தங்களின் பட்டா நிலத்தில் செல்லும் வாய்க்காலினை கடந்து செல்வதற்கு கான்கீரிட்டாலான சிறுபாலங்கள் நீர்வளத்துறையின் அனுமதி பெற்று அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களின் நிறுவனத்தின் நிலங்களினை ஒட்டி புல எண். 201/2 & 202/6-ல் செல்லும் நீர் நிலை புறம்போக்கு நிலத்தில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதால், ஆணையர், நகரம் மற்றும் ஊரகமைப்பு திட்டமிடல் மூலம் வழங்கிய சுற்றறிக்கை ROC. No. 4367 / 2019 BA2, நாள். 13.03.2019-ன் படி3.00 மீ பக்க இடைவெளி (Set Back) விடப்பட வேண்டும் என தொழில்நுட்ப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அவர்களால் தடையின்மைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. தார்சாலையிலிருந்து விடப்படும் இந்த 3.00 மீ பக்க இடைவெளி நிலப்பகுதியில் செல்லும் பட்டா வாய்க்காலின் மீது சிறுபாலம் அமைத்து, அதன் மூலம் தங்களது நிலத்தினை அணுகிட பயன்படுத்திக் கொள்ளலாம் என உதவி செயற்பொறியாளர், நீவது., கீழ்பாலாறு வடிநில உபகோட்டம், செங்கல்பட்டு அவர்களின் பரிந்துரை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செரப்பணஞ்சேரி ஏரியின் நீரியியல் விவரங்கள்

ஏரியின் முழு நீர் மட்ட அளவு (FTL)	:	(+) 14.870 மீ
ஏரியின் உச்ச நீர் மட்ட அளவு (MWL)	:	(+) 15.330 மீ
ஏரிக்கரையின் மேல் மட்ட அளவு (TBL)	:	(+) 16.700 மீ
ஆழ மதகின் அடிமட்ட அளவு (Deepest Sill Level)	:	(+) 10.730 மீ

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், செரப்பணஞ்சேரி கிராமத்தில் புல எண்கள். 201/1B & 202/5A-ல் செல்லும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள செரப்பணஞ்சேரி – மோச்சேரி கிராம தார் சாலையிலிருந்து தங்களுக்கு சொந்தமான புல எண்கள். 201/2 & 202/6-ல் ஆகியவற்றுக்கு சென்று வர இடையில் உள்ள பக்க இடைவெளி (Set Back) நிலத்தில் செல்லும் பட்டா நில வாய்க்காலின் குறுக்கே தங்களது சொந்த செலவில் சிறுபாலம் அமைக்கப்பட்டால் மட்டுமே தங்களது நிலங்களுக்கு சென்று வர இயலும் என்ற தங்களது கோரிக்கையின் அடிப்படையிலும், தள ஆய்வு மேற்கொண்ட தள அலுவலர்களின் பரிந்துரையில் தெரிவித்துள்ளவாறு வழித்தட வாடகையின்றி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவில் தங்களது சொந்த செலவில் கீழ்கண்ட நீரியியல் விவரங்களின் அடிப்படையில் சிறுபாலங்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

Sl. No.	Patta Channel in set back land of S.F. No	Access S.No		Propose d Bed Level in (m)	MFL in (m)	Minimum inner width of channel as per FMB Average	Minimum Inner Vent height or bottom deck slab level (m)	Carriage Width of Culvert in (m)	Area of Culvert in Sqm	No.of Vents allowed
		From	To							
1	201/1B & 202/5A	Existing Village Road	201/1B & 202/5A	(+) 8.000	(+) 8.950	3.25 m	(+) 9.500	7.20	23.40	1

மேற்காணும் நீரியியல் விவரங்களின் அடிப்படையில் தங்களுக்கு செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், செரப்பணஞ்சேரி கிராமத்தில் புல எண்கள். 201/1B & 202/5A-ல் செல்லும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள செரப்பணஞ்சேரி – மோச்சேரி கிராம தார் சாலையிலிருந்து தங்களுக்கு சொந்தமான புல எண்கள். 201/2 & 202/6 ஆகியவற்றுக்கு சென்று வர இடையில் உள்ள பக்க இடைவெளி (Set Back) நிலத்தில் செல்லும் பட்டா நில வாய்க்காலின் குறுக்கே தங்களது சொந்த செலவில் மூன்று சிறுபாலங்கள் அமைத்துக்கொள்ள கீழ்கண்ட

நிபந்தனைகளின் அடிப்படையில் தற்காலிக தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், செரப்பணஞ்சேரி கிராமத்தில் புல எண்கள். 201/1B & 202/5A-ல் செல்லும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள செரப்பணஞ்சேரி – மோச்சேரி கிராம தார் சாலையிலிருந்து தங்களுக்கு சொந்தமான புல எண்கள். 201/2 & 202/6 ஆகியவற்றுக்கு சென்று வர இடையில் உள்ள பக்க இடைவெளி (Set Back) நிலத்தில் செல்லும் பட்டா நில வாய்க்காலின் குறுக்கே தங்களது சொந்த மூன்று சிறுபாலம் அமைத்துக்கொள்ள அனுமதி கோரி விண்ணப்பித்துள்ள இடத்தில் இத்துறையினரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சிறுபாலத்தின் வரைபடத்தின்படி உள்ள நீளம், அகலம், உயரம் மற்றும் மட்ட அளவிற்கேற்ப தங்களின் சொந்த செலவில் சிறுபாலம் (Culvert) அமைத்துக்கொள்ள வேண்டும்.

2. தங்களின் நிறுவனத்திற்கு சொந்தமான பக்க இடைவெளி நிலத்தில் அமைக்கப்படவுள்ள சிறுபாலங்களானது வரைபடத்தில் உள்ளவாறு வாய்க்காலின் நீர்வழிப்பாதையில் ஒரு கண் கொண்டவாறு (Single Vent) பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அளவுகளில் எவ்வித மாறுபாடின்றி அமைக்கப்பட வேண்டும்.

Sl. No.	Patta Channel in set back land of S.F. No	Access S.No		Propose d Bed Level in (m)	MFL in (m)	Minimum inner width of channel as per FMB Average	Minimum Inner Vent height or bottom deck slab level (m)	Carriage Width of Culvert in (m)	Area of Culvert in Sqm	No.of Vents allowed
		From	To							
1	201/1B & 202/5A	Existing Village Road	201/1B & 202/5A	(+) 8.000	(+) 8.950	3.25 m	(+) 9.500	7.20	23.40	1

3. தாங்கள் மேற்கூறிய நீரியியல் வடிவமைப்பு விவரத்திற்கு உட்பட்டு கட்டமைப்பில் வரைபடத்தை தகுதி வாய்ந்த அரசு அனுமதி பெற்ற பொறியாளரிடமிருந்து Government Licensed Engineer) வடிவமைப்பு பெற்று சிறுபாலங்கள் கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டமைப்பியல் வரைபடத்தை செயற்பொறியாளர், நீ.வ.து., கீழ்பாலாறு வடிநில கோட்டம், காஞ்சிபுரம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே சிறுபாலம் கட்டப்பட வேண்டும். சிறுபாலங்களின் உறுதி மற்றும் தரத்திற்கு தாங்களே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

4. வருவாய் துறை ஆவணங்களின் படி நிறுவனத்திற்கு சொந்தமான புல எண். 213/1, 213/20, 213/20, 213/3, 211/2, 198/10. 20, 199/2, 199/6, 200/16. 201/10, 231/102, 212/1, 2, 3, 208/20, 20, 24, 24, 26, 207, 206/1, 2 மற்றும் 205 ஆகிய புலங்களில் செல்லும் நிலவியல் கால்வாய் ஆனது பட்டா நிலத்தில் செல்லும் கால்வாய் ஆகும். இக்கால்வாய் செரப்பணஞ்சேரி ஏரியின் மதகு எண்.2-ன் கீழ் பாசனம் பெரும் நிலவியல் வாய்கால் ஆகும். மேலும், வருவாய்துறை ஆவணங்களின் படி வரையறுக்கப்பட்ட கால்வாய் இல்லை. எனவே கூட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள உத்தேச 7.20மீ சாலையின் வலது ஓரமாக மேற்கிலுருந்து கிழக்கு நேக்கி தங்களது நிலம் முடியும் வரை 1.20மீ X 0.90மீ அளவில் ஒரு மூடுகால்வாய் அமைத்து அதனை புல எண்.201/2 & 202/6ல் சென்றடையுமாறு இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கும் பட்சத்தில் அருகாமையில் உள்ள புல எண் நிலங்களுக்கு தண்ணீர் செல்ல வழிவகை செய்யப்பட வேண்டும்.

5. தங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான பக்க இடைவெளி நிலத்தில் சிறுபாலம் அமைக்கப்படும் பகுதியினை தவிர்த்து தங்களுக்கு சொந்தமான நில எல்லைகளில் தங்களின் நிலத்தில் வாய்க்காலின் இருபுறமும் தடுப்பு சுவர் (Retaining Wall) அமைத்து தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும். மீறும் பட்சத்தில் தங்களுக்கு வழங்கப்படும் தற்காலிக அனுமதியானது இரத்து செய்யப்படும்.

6. தங்கள் நிறுவனத்தால் சிறுபாலத்தின் கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு முன்பு காப்பு தொகையாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) "The Executive Engineer, WRD., Lower Palar Basin Division, Kancheepuram" என்ற பதவி பெயருக்கு வங்கி கேட்பு வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும். சிறுபாலம் கட்டும் பணிகள் முடிவடைந்த பின் செயற்பொறியாளர் அவர்களால் கட்டுமான பணிகளை ஆய்வு செய்த பின்னர் உரிய முறையில், வடிவமைப்பில் உள்ளவாறு சிறுபாலம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதுமட்டுமின்றி வாய்க்காலில் நீர் செல்வதற்கு பாதிப்பு ஏதும் ஏற்பட்டிருந்தால் மீண்டும் அதனை பழையநிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் இக்காப்புத் தொகையினை கொண்டு அதனை பழையநிலைக்கு நீர்வளத்துறையின் மூலம் கொண்டு வரப்படும்.

7. தங்கள் நிறுவனம் சிறுபாலம் அமைத்துக்கொள்ள அனுமதி கோரியுள்ள நிலங்கள் தங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான பட்டா நிலத்தில் செல்லும் பக்க இடைவெளி (Set back) நிலம் என்பதால், தள அலுவலர்களின் பரிந்துரை அறிக்கையின்படி வழித்தட வாடகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது.

8. தங்கள் நிறுவனத்தால் சிறுபாலம் அமைக்கப்பட்ட பின்னர் சிறுபாலங்களின் இருபுறமும் தூர்வாரி கரையை பலப்படுத்த வேண்டும். மேலும் 30.00 மீட்டர் தூரத்திற்கு சிறுபாலத்தின் இருபுறங்களிலிருந்து வாய்க்காலின் இரு கரைகளிலும் சரிவான கருங்கல் கட்டிடம் தங்களின் சொந்த செலவில் நீர்வளத்துறை அலுவலர்கள் முன்னிலையில் அமைத்திடல் வேண்டும்.

9. சிறுபாலம் அமைக்கும்போது வாய்க்காலின் அமைப்பிற்கோ அல்லது பொதுமக்களுக்கோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தாமல் செயல்படுத்திடல் வேண்டும். மேலும், இதனை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கும் தடையேதும் செய்யக்கூடாது.

10. தங்களால் சிறுபாலம் அமைக்கப்பட்ட பின்னர் சிறுபாலத்தின் வழியாக தண்ணீர் தங்கு தடையின்றி செல்லும் வகையில் அவ்வப்பொழுது தூர்வாரி வாய்க்காலை சொந்த செலவில் பராமரிக்கப்பட வேண்டும். மேலும் வாய்க்காலில் தடை ஏற்படுத்தவோ, தண்ணீர் செல்லும் பகுதியில் தேக்கி வைக்கும் அமைப்புகள் ஏதும் ஏற்படுத்துதல் கூடாது.

11. தாங்கள் வாய்க்காலினை கடந்து செல்வதால் வாய்க்காலையும், சிறுபாலத்தினையும் உரிமை கோரக் கூடாது. வாய்க்காலை கடப்பதற்கு சிறுபாலம் அமைக்க மட்டுமே தற்காலிக தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

12. நீர்வளத்துறையின் மூலம் தூர்வாரும் பொழுது எவ்வித தடையும் ஏற்படுத்தக்கூடாது. மேலும், நீர்வளத்துறை அதிகாரிகள் எந்த நேரத்திலும் தளத்தினை பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும்.

13. தாங்கள் சிறுபாலம் அமைத்துக்கொள்ள அனுமதி கோரியுள்ள இடத்தில் செல்லும் கால்வாயினை அகலப்படுத்தும் பொழுதோ, அரசு திட்டங்கள் (அ) வேறு அவசியமான காரணங்களுக்காக அபரிமிதமான வெள்ளநீர் செல்லும் காலங்களிலோ அவசியம் ஏற்பட்டால் இந்த சிறுபாலத்தினை இடித்துவிட்டு பராமரிப்பு பணிகள் மற்றும் கட்டுமானப்பணிகள் செய்வதற்கு நீர்வளத்துறைக்கு முழு அதிகாரம் உண்டு. இதற்கான இழப்பீட்டிற்கு நீர்வளத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

14. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தங்களின் நிலங்கள் வருங்காலத்தில் மூன்றாம் தரப்பினருக்கு / சங்கத்திற்கு மாற்றப்படும் பட்சத்தில், குத்தகை வாடகையை மூன்றாம் தரப்பினர் / சங்கம் தவறாமல் அவ்வப்போது செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த சிறுபாலம் இடித்து அப்புறப்படுத்தப்படும். மேலும், இதற்கான இழப்பீட்டிற்கு நீர்வளத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

15. தங்களின் நிலங்களில் கட்டப்படும் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரை வாய்க்காலில் விடக்கூடாது. எனவே, கழிவுநீர் சுத்திகரிப்பு உள் கட்டமைப்பு வசதிகளை தங்களது நிலப்பகுதியிலேயே தங்களின் சொந்த செலவில் தங்களால் அமைத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

16. தாங்கள் நீர்வளத்துறைக்கு தெரிவிக்காமல் சிறுபாலம் கட்டினாலோ அல்லது நீர்வளத்துறை மூலம் ஒப்புதல் வழங்கப்படும் வரைபடம் மற்றும் வடிவமைப்பிலிருந்து மாறுபட்டு சிறுபாலம் கட்டப்பட்டாலோ அதனை இடித்து அப்புறப்படுத்த இத்துறைக்கு முழு அதிகாரம் உண்டு. அவ்வாறு இடிக்கும் போது தாங்கள் வழக்கு போட உரிமை ஏதுமில்லை. சிறுபாலம் இடித்து எடுப்பதற்கு ஆகும் செலவையும் தாங்களே ஏற்க வேண்டும்.

17. நீர்வளத்துறையிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்ற 6 (ஆறு) மாதங்களுக்குள் சிறுபாலத்தின் வடிவமைப்பு ஒப்புதல் பெறப்பட்டு சிறுபாலம் கட்டும் பணிகள் துவக்கப்பட வேண்டும். ஆறு மாதங்கள் கடந்து விட்டால் நீர்வளத்துறையிடம் மறு அனுமதி பெறப்பட வேண்டும்.

18. இந்த தற்காலிக தொழில்நுட்ப அனுமதியானது தங்களது நிலத்தை அணுகிட சிறுபாலம் அமைக்கப்படுவதற்கு மட்டுமே மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. இந்த தற்காலிக தொழில்நுட்ப அனுமதியானது எந்த நேரத்திலும் எவ்வித காரணத்தையும் தெரிவிக்காமல் திரும்பப் பெற இத்துறைக்கு முழு அதிகாரமுண்டு. அதே சமயம் மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் அனுமதியினை இரத்து செய்ய பரிந்துரை செய்யப்படும். இதற்காக தங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டிற்கு எந்த காலத்திலும் நீர்வளத்துறை பொறுப்பேற்காது.

இணைப்பு –கிராம வரைபடம் (ம) ஆவணங்கள்

செயற்பொறியாளர், நீ.வ.து.,
கீழ்பாலாறு வடிநில கோட்டம்,
காஞ்சிபுரம்.

12/6/26

THE LANDLENS SUITE

Eight ways to know a piece of land before you pay for it.

This report covers one part of the picture. These cover the rest, drawn from the same government records, for any property in Tamil Nadu.

LandLens One
Ask anything about a property and get an answer grounded in live government records, with the sources shown.
/landlens/one

Verify My Land
Every record check run on one property and returned as a single report.
/landlens/verify-my-land

Legal Opinion
An advocate's written opinion on the title, built on the records we pull for it.
/landlens

One Map
Every layer on one map: the parcel, its boundary, zoning, water bodies and what sits around it.
/landlens/one/map

PriceMap
What land actually changed hands for around this plot, taken from the registered deeds.
/landlens/pricemap

Build Scope
What you are allowed to build here: floor space, height, coverage and setbacks.
/landlens/build-scope

Property Tracker
Watch a property and hear about it when something new is registered against it.
/landlens/property-tracker

Deal Room
Run the transaction in one place: documents, stamping, signatures and the parties.
/landlens/deal-room

FREE TOOLS · NO ACCOUNT NEEDED

Twenty-four checks you can run yourself, at no cost.

Records and verification

The registers themselves, read for you.

- Encumbrance Certificate
- Patta and Chitta
- Field Measurement Sketch
- EC Analyzer
- Bank charge check
- Court case search
- Seller background check
- Approval check by survey

Value and duty

What it is worth and what it costs to register.

- Guideline value by street
- Guideline value by survey
- Stamp duty and registration fees
- Capital gains
- Floor space index
- Area unit converter

Zoning and land use

What the plan says can happen on this land.

- Land use zone finder
- CMDA land use check
- Coastal regulation zone
- Master plan check
- Water bodies finder
- Airport height clearance

Registers and directories

Who holds it, and which office keeps the record.

- Find your registering office
- Temple property check
- Waqf property check
- RERA register

Every free tool
/tools

Services we run for you
/services

The LandLens suite
/landlens/one

Verified RealEstate™

Every claim in this document traces back to a government record.

- Legal opinions, due diligence and title verification
- Building plan, layout and sub-division approvals
- Completion and occupancy certificates, regularisation
- Escrow, negotiation and NRI property management
- Land survey, soil testing, architecture and construction

Verified RealEstate
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India
hello@verified.realestate
+91 9996 12 9996

Prepared from the registers named on the page each finding sits on. Where a register could not be read, this document says so in its place rather than leaving the gap to be read as a clean result.